# <u>செயற்குழுக் கூட்டம் (24-12-2022)</u>

இன்று நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில்,, உப தலைவரும், பொது செயலாளரும் ஐந்து செயற்குழு உறுப்பினர்களும், பார்வையாளர்களாக இரண்டு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் நவம்பர் மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. சென்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில் கூறியபடி அனைத்து மாவட்டங்கள், மற்றும் கிளைகளுக்கு கேட்டு கடிதங்கள் எழுதப்பட்டன. அவற்றில் கடலூர் மாவட்டத்தை தவிர மற்ற மாவட்டங்களிலிருந்து மூன்றாண்டு வரவு செலவு கணக்குகள், உறுப்பினர் முதலியவை பற்றி பதில் ஏதும் வரவில்லை... எந்த ஒரு பதிலும் 31/12/2022-குள் கிடைக்கப் பெறாவிடில், சம்மந்தப்பட்ட கிளைகளை மூட உத்திரவிட பொதுச்செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து தீர்மானிக்கப்படுகிறது.

3. அமைச்சர் **<u>செந்தில் பாலாஜி வழக்கு</u>**: திரு செந்தில் பாலாஜி அவர்கள் மீதான வழக்குகளை மீண்டும் ஆரம்பம் முதல் விசாரிக்க வேண்டும்; அதுவும் "முந்தைய விசாரனையை முழுவதுமாக ரத்து செய்து, புதிய சான்றாவனங்களைக் கண்டுபிடித்து, அதன் அடிப்படையில் தான் குற்ற அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது" குறித்து அதிர்ச்சியடைவதாகவும், ஏற்கனவே கிடைத்த ஆதாரங்களே செவ்வனே ஊழலை நிரூபிக்கும்போது, அவற்றை நீக்கிவிட்டால், புதியதாக எந்தவொரு சான்றாவனமும் கிடைக்கப்போவதில்லை. ஆக, தீர்ப்பு, குற்றவாளிகளை அப்பட்டமாக விடுதலை செய்வதாகிறது. செந்தில் பாலாஜி தமது அமைச்சர் பதவியை துஷ்பிரயோகம் செய்து, போலீசின் வாயை அடக்கி இத்தீர்ப்பை பெற்றுள்ளது அப்பட்டமாகத் தெரிகின்றது என்று ஒவ்வொரு உறுப்பினரும் கவலை தெரிவித்தனர். எனவே, அவரது ஜாமீனை ரத்துசெய்வது மற்றும் இதில் சம்பந்தந்தப்பட்ட போலீசாரையும் குற்றவழக்கில் தண்டிக்க வேண்டுவது உட்பட, இவ்வழக்கில் நீதியை நிலைநாட்ட அனைத்து சட்டப்போராட்டங்களை நடத்தவும், இது போன்ற அநீதிக்கு வழிவகை செய்யும் சட்டங்களை நீக்கவும் அதற்கான உரிய வழக்குகளைத் தொடுக்கவும், தொடர்ந்து நடத்தத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் செயற்குழு பொதுச்செயலாளருக்கு அளித்து தீர்மானிக்கிறது. இச்சங்கத்தின் வழக்குகளை, எந்தவித பணப்பயனும் இன்றி இலவசமாக நடத்திக் கொடுக்கும் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் பிரசாந்த் பூசன், பிரணவ் சச்தேவா, மற்றும், ந.சுப்ரமணியன் ஆகியோருக்கு இச்செயற்குழு இருகரம் கூப்பி நன்றியைக் காணிக்கையாக்குகிறது.

4. நீதி மன்றத்தில் அதிகமாக வாய்தா வழங்குவதால் தீர்ப்புகள் தாமதமாகின்றன. இவற்றை நிவர்த்தி செய்ய வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். வாய்தாவுக்கு அபராதம் விதித்தோ, வழக்குறைஞர்களுக்கு தற்கால இடைநீக்கமோ செய்து சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும் என்பதற்கான வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல்பட வேண்டும் . இதற்கான வடிவு மனுவை நமது செயலாளர் (சட்டம்) தயார் செய்யும்படி செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

5. திரு மனுராஜ் அவர்களிடமிருந்து என்த ஒரு பதிலும் வரவில்லை. நமது இயக்க உறிப்பினர் திரு அரங்கராஜன் அவர்கள் திரு மனுராஜை நேரில் சந்தித்து பதில் பெற்றுக்கொள்ள முயற்சி செய்யுமாறு செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

6.. உடல்நிலை காரணமாக நமது நிதிச் செயலாளர் தொடர்ச்சியாகப் பணியாற்ற முடிய முடியவில்லை. எனவே , பொது செயலாளர் நிதிச் செயலாளர் பொறுப்பை தற்காலிகமாக ஏற்றுக்கொள்ள தீர்மானம் நிறைவேறியது.

7. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

ஒப்பம் ஒப்பம்

ந சுப்ரமணியன்
தலைவர்

V கார்த்திகை ராஜன்
பொதுச் செயலாளர்